<u>DEPOSITON OF WITNESS</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)
Assistant Sessions Judge, Sankari
<u>IN THE COURT OF SUBORDINATE JUDGE, SANKARI</u>

Calender }
Miscellaneous }
Preliminary Register }
Sessions } Case No.SC.6/2020

Deposition of Witness { PW.2
{ Prosecution
{

Name : சின்னபொன்னு
Father's Name :
Taluk :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.06.2024.

2024ம் ஆண்டு ஜுன் மாதம் 19 ஆம் நாள் அரசு தரப்பு சாட்சி என்பவரின் சாட்சியாகிய அ.சா.2ன் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 44 வது சட்டத்தின் 4 வது பிரிவின் கீழ் திரு.ந.பன்னீர்செல்வம்,பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிடப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு சாட்சி விசாரிக்கப்படுகிறார்.

எதிரிகள் ஆஜரில் உள்ளார்கள்.

<u>முதல் விசாரணை</u>

நான் மேட்டாங்காட்டில் குடியிருக்கிறேன். நான் வேலைக்கு செல்வதில்லை. பட்டியல் சாட்சி 1 என் மகன் அவர் இறந்துவிட்டார். அ.சா.1 என் மருமகள். அவர் மதிவாணனின் மனைவி. எனக்கு எதிரிகளை தெரியும். என் மகன் மதிவாணன் காட்டில் விளைச்சல் இல்லை என்பதால் குடும்ப செலவுக்காக ஆஜர் எதிரிகளிடம் வட்டிக்காக ரூ.3 லட்சம் கடன் வாங்கியிருந்தார். அந்த கடனை வட்டியுடன் சேர்த்து நானும் என் பேரன் நிசந்தன் என்பவரும் திருப்பி கொடுப்பதற்காக கோபால் வீட்டிற்கு சென்றோம். அதற்கு கோபால் எங்களிடம் அசலையும், வட்டியையும் வைத்திருங்கள் நான் பிறகு வாங்கி கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார். ஆனால் நாங்கள் கோபாலிடம் பணத்தை கொடுத்துவிட்டு வந்துவிட்டோம். அதன் பிறகு நாங்கள் பணம் செலுத்தவில்லை என்று

சொல்லி மொண்டி கை முருகேசன் சொன்னதன் பேரில் ஆட்கள் வந்து கட்டியிருந்த 6 கடைகளை JCB கொண்டு இடித்து தரைமட்டமாக்கிவிட்டு சென்றுவிட்டார்கள். முருகேசனுடன் மற்ற எதிரிகளும் கட்டிடத்தை இடிக்கும் போது உடன் வந்தார்கள். நாங்கள் நிலத்தை விற்க வேண்டும் என்று பத்திரம் எழுதி கொடுக்கவில்லை. முருகேசன் கேட்டதால் என் மகன் தெரியாமல் கையெழுத்து போட்டுவிட்டார். அதன் பிறகு சம்பவம் தொடர்பாக தேவூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து எடுக்கவில்லை என்பதால் சேலத்தில் என் மகன் மதிவாணன் புகார் கொடுத்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

சாட்சி சுமார் 90 வயதை கடந்த நிலையில் சரியாக காது கேட்காமல் மிகவும் தளர்ந்த நிலையில் உள்ளார். அவர் சக்கர நாற்காலியில் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டு விசாரிக்கப்பட்டுள்ள நிலையில் எதிரிகள் தரப்பில் உடனடியாக குறுக்கு விசாரணை செய்ய முன்வரவில்லை என்பதால் குறுக்கு விசாரணை இல்லை என்று முடிக்கப்படுகிறது.

Sd/-சின்னபொன்னு

Sd/- திரு.ந.பன்னீர்செல்வம்,
சார்பு நீதிபதி, சங்ககிரி.